# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:30/பேரூ/2024**
**நாள் : 07.11.2025**

S.K. கோபால்,
மம்சாபுரம்,
விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மம்சாபுரம் முதல்நிலை பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தாலுகா, மம்சாபுரம், க.எண். 17, காந்திஜி வாசக சாலை தெரு, என்ற முகவரியை சேர்ந்த திரு. S.K. கோபால் என்பவரது 31.05.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.06.2024 அன்று பெறப்பட்டு, 30/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தாலுகா, மம்சாபுரம், க.எண். 17, காந்திஜி வாசக சாலை தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. S.K. கோபால் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 31.05.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"கடந்த 1 மாத காலமாக மம்சாபுரம் பேரூராட்சி 17-வது வார்டு இராஜபாளையம் ரோடு, பேருந்து நிறுத்தம் பாலம் முதல் ஐயப்பன் கோவில் வரையிலான கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வடிகால் அமைப்பானது அந்த ஒப்பந்தப்பணியினை எடுத்துள்ள ஒப்பந்தகாரரால் சரியான முறையில் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி ஒப்பந்தப்பணியினை பேரூராட்சி செயல் அலுவலரோ, பேரூராட்சி பொறியாளரோ, அல்லது மேற்படி மம்சாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட AEE (பொறியாளரோ) ஒழுங்காக மேற்பார்வை செய்யவில்லை. மேற்படி வடிகால் பணிக்கு சரியான கலவை (சிமெண்ட், ஜல்லி, மணல் அல்லது M-Sand) பயன்படுத்தப்படவில்லை. மேற்படி வடிகால் பணியானது புதிதாக ஏற்படுத்தப்படுவதால்

அடிப்பாகத்தில் முறையான பிளாட் அமைப்பு ஏற்படுத்தப்படவில்லை. இந்நிலையில் கேட்பாரற்று ஒப்பந்தப்பணிகள் நடைபெற்று வந்த நிலையில் மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர், பொறியாளர் AEE (பொறியாளர்) கூட்டுச் சதி செய்து பல இலட்சம் ரூபாய் பில் எடுத்துவிட்டனர். இந்நிலையில் கடந்த 14.05.2024ஆம் தேதி இரவு பெய்த சிறு மழைக்கே வடிகால் பணி மேற்கொள்ளப்பட்ட கூட்டுறவு கருப்பட்டி சங்கம் அருகில் சுமார் 30 மீட்டர் அளவில் வடிகால் கட்டுமானம் இடிந்து விழுந்துவிட்டது. மேற்படி வடிகால் இடிந்து விழுந்ததற்கு மழை காரணம் அல்ல. மேற்படி வடிகால் சுவரின் மேல்புறம் முழுவதும் ஜல்லியாகவே காட்சி அளிக்கிறது. மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர், பொறியாளர், AEE (பொறியாளர்) ஆகியோரின் அலட்சியப்போக்கும், கொள்ளை லாபம் சம்பாதிக்கும் விரும்பும் ஒப்பந்தக்காரரின் தரமற்ற கட்டுமானப் பொருட்களுமே காரணமாகும். எனவே பல இலட்சம் செலவில் முன்னாள் முதல்வர் பெயரில் செயல்படுத்தக்கூடிய வடிகால் கட்டுமானத்தை தரமற்றதாக கட்டும் கட்டுமானத்தை உடனடியாக நிறுத்தச் செய்தும், ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட கட்டுமானங்களை முறையாக ஆய்வு செய்தும், வடிகால் கட்டுமானத்தின் அடிப்பகுதியில் எந்த இடத்திலும் பிளாட் அமைப்பு ஏற்படுத்தாததை ஆய்வு செய்தும், மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர், பொறியாளர், AEE (பொறியாளர்) ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுத்தும், இதுவரை ஒப்பந்தக்காரர் வாங்கிய தொகைகளை திரும்ப பேரூராட்சி பெயரில் வைப்பீடு செய்ய உத்தரவிட்டும், உரிய விசாரணைக்கு பின்பு மேற்படி வடிகால் பணிகளை புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி கட்டுமானப்பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க குற்றச்சாட்டு" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் மம்சாபுரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. மம்சாபுரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 22.07.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சி 2023-2024ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மம்சாபுரம் பேரூராட்சி ஐயப்பன் கோவில் முதல் பஸ்நிறுத்தம் வரை (மம்சாபுரம் முதல் இராஜபாளையம் மெயின்ரோடு) மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டி உள்ளதாகவும் இப்பணியில் ஒப்பந்தக்காரர் சரியான முறையில் பணி மேற்கொள்ளவில்லை எனவும் மேற்காணும் பணியினை செயல் அலுவலரோ, பேரூராட்சி பணியாளரோ மற்றும் உதவி செயற்பொறியாளரோ ஒழுங்காக மேற்பார்வை செய்யவில்லை எனவும் இப்பணியில் சரியான கலவை (சிமெண்ட், ஜல்லி, மணல் அல்லது எம்.சாண்ட்) பயன்படுத்தப்படவில்லை எனவும் அடிப்பகுதியில் முறையான பிளாட் அமைப்பு ஏற்படுத்தப்படவில்லை எனவும் இப்பணியில் கூட்டுசதி செய்து பல இலட்சம் ரூபாய் பில் எடுத்து விட்டனர் எனவும் தெரிவித்து, இந்நிலையில் 14.05.2024ஆம் தேதி பொழிந்த சிறுமழையால் 30 மீட்டர் தொலைவிலான வடிகால் இடிந்து விட்டதாகவும், இடிந்து விழுவதற்கு மழை காரணம் அல்ல எனவும் முன்பின் முரணான விபரத்தினை தெரிவித்து உள்ளார். இப்பணியில் ஒப்பந்தக்காரரால் தரமற்ற கட்டுமான பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அதன் காரணமாக இப்பணி நடைபெற்ற இடத்தினை ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மனுதாரர் புகார் அளித்துள்ளார்.

முறையீட்டாளரின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் முற்றிலும் அடிப்படை ஆதாரமற்றதும், உண்மைக்கு புறம்பானதும், உள்நோக்கம் உடையதாகவும் என்பதற்கு கீழ்க்கண்ட விபரப்படியான உண்மை நிலையான தகவலினை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மம்சாபுரம் பேரூராட்சியில் 2023-2024ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் பணி மேற்கொள்வதற்கு சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண். 9436/2023/ஆ4 நாள் 02.09.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பேரூராட்சிகள் இயக்குநரக கண்காணிப்பு பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 9436/2023/ஆ4 நாள் 13.09.2023ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்பணியானது இருஉறை முறைப்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திருமதி. மு. ஜோதி என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்பரீதி ஒப்பந்தப்புள்ளியில் (Technical Bid) அன்னாரிடம் இப்பணியினை செய்வதற்கு உரிய நிதி ஆதாரம் உள்ள விபரம் அறியப்பட்டதுமின்றி இப்பணியினை மேற்கொள்வதற்கு உரிய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதற்கான ஆதாரங்களும் அறியப்பட்டு அதனடிப்படையிலேயே தனியரது விலை ரீதியான ஒப்பந்தப்புள்ளி (Price Bid) பரிசீலிக்கப்பட்டு இப்பணியினை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இப்பணியானது இப்பேரூராட்சியின் உதவி பொறியாளர் (தொகுப்பு), உதவி செயற்பொறியாளர் ஆகியோர்களால் முறையாக மேற்பார்வை செய்யப்பட்டு இப்பணிக்கான அளவு புத்தகம் எண்.22/2023-2024-ல் அனைத்து பதிவுகளும் பதிவு செய்யப்பட்டு அதனடிப்படையில் மூன்று கட்டங்களாக முறையே ரூ.30.00 இலட்சம், ரூ.24.00 இலட்சம் மற்றும் ரூ.3.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.57.00 இலட்சத்தை 12.03.2024, 12.04.2024 மற்றும் 19.07.2024ன்படி வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரின் முறையீட்டு மனுவில் முற்பகுதியில் 14.05.2024ஆம் தேதி பொழிந்த மழை பொழிவு காரணமாக கட்டுமானம் இடிந்து விழுந்து விட்டது எனவும் பின்னர் கட்டிடம் இடிந்து விழுந்ததற்கு மழை காரணம் இல்லை எனவும் முன்பின் முரணான புகாரின் உண்மைக்கு புறம்பாக தெரிவித்துள்ளார்.

கடந்த 14.05.2024ஆம் தேதி பெய்த சிறுமழை காரணமாக இடிவுற்றதாக குறிப்பிட்டுள்ளது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது ஆகும். உண்மை நிலையில் இவ்வாறுகாலுக்கான பக்கச்சுவர் கட்டுமான பணி மேற்கொள்ளப்பட்டு கட்டுமான பணியில் கான்கீரிட் கட்டுமானம் கட்டி முடிக்கப்பட்ட ஒரு சில நிமிடங்களுக்குள், கட்டுமானம் உலர்வதற்குள் எதிர்பாராதவிதமாக திடீரென பொழிந்த கனமழை காரணமாகவே சுமார் 4 மீட்டர் தூரத்திற்கு கான்கீரிட் கட்டுமானம் சரிந்துள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும் மழை நின்றவுடன் அதே நாளில் மீண்டும் உடனடியாக ஒப்பந்தக்காரர் செலவிலேயே கான்கிரீட் கட்டுமானம் கட்டப்பட்டு தற்போதைய நிலையிலும் உறுதியுடன் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இப்பணி முடிவுற்ற பின் விருதுநகர் மாவட்டம் கலசலிங்கம் ஆய்வு மற்றும் பொறியியல் கல்வி கூட பதிவாளர் அவர்கள் மூலம் தொழில்நுட்ப வல்லுநர்களால் மூன்றாம் தரப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்நிறுவனத்தின் 12.07.2024ஆம் தேதிய ஆய்வு அறிக்கை எண்.KARE/Civil/Consultancey/2023/2024 பெறப்பட்ட பின்னரே இறுதி பட்டியல் தொகை 19.07.2024ஆம் அன்று வழங்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறுகால் பணியில் முறையான அளவு கட்டுமான பொருட்கள் பயன்படுத்தப்பட்டு தரமாகவே கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி இப்புகார் எவ்வித ஆதாரமின்றியும், உண்மைக்கு புறம்பாகவும், உள்நோக்கம் உடையதாகவும் உள்ளது என்ற விபரம் மீண்டும் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே மேற்காணும் அறிக்கையினை ஏற்றும் உரிய ஆவணங்களை பார்வையிட்டும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டு மனுவினை நிராகரிக்குமாறும் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. S.K. கோபால் மற்றும் எதிர்மனுதாரரான மம்சாபுரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 24.07.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. S.K. கோபால் என்பவர் 24.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியில் 17வது வார்டில் இராஜபாளையம் ரோடு, பேருந்து நிறுத்தம் பாலம் முதல் ஐயப்பன் கோவில் வரையில் கலைஞர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகாலானது ஒப்பந்ததாரரால் சரியான கலவையின்றி தரமற்ற முறையில் கட்டி வருவதாகவும், வடிகாலின் அடிபாகத்தில் முறையான பிளாட் அமைப்பு ஏற்படுத்தப்படவில்லை.

- இந்நிலையில் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பொறியாளர் ஆகியோர் உள்நோக்கத்துடன் ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகையும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- இதற்கிடையில் 14.05.2024 அன்று பெய்த சிறு மழையிலேயே மேற்படி மழைநீர் வடிகால் இடிந்து விழுந்து ஜல்லியாக காட்சியளிக்கிறது.

- எனவே வடிகால் கட்டுமானப் பணிகளை நிறுத்திடவும், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பொறியாளரின் அலட்சியப் போக்கினால் பல இலட்சம் ரூபாய் நிதியிழப்பு ஏற்படக் காரணமான ஒப்பந்ததாரரிடம் இருந்து இதுவரை ஒப்பளிப்பு செய்த தொகையினை திரும்பப் பெறுவதற்கும் மற்றும் சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

- எனவே புதிய ஒப்பந்தப்புள்ளி மூலம் மழைநீர் வடிகாலினை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது 31.05.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவிக்கப்படாத பேரூராட்சியில் உள்ள கீழ்க்காணும் குறைபாடுகள் தெரிவிக்கிறேன்.

(1) சுடுகாட்டில் மோட்டார் பம்பு காணவில்லை, எரிமேடை சரியாக கட்டப்படவில்லை மற்றும் குளிக்கும் தொட்டி கட்டப்படும் என பேரூராட்சியால் தெரிவிக்கப்பட்டும் இந்நாள்வரை கட்டப்படவில்லை.

(2) பேரூராட்சியில் பேவர் பிளாக் சாலையானது ஆழமாக தோண்டி அமைக்கப்படாமல் அரைகுறையாக அமைக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் கூடுதல் புகாரினை குறித்தும் பேரூராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான மம்சாபுரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பா. இராதாகிருஷ்ணன் என்பவர் 24.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியில் 2023-24ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணியினை மேற்கொள்ள 02.09.2023 நாளிட்ட சென்னை, பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறைகள் ஆணையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டும், அதனைத் தொடர்ந்து பேரூராட்சிகளின் இயக்குநரக கண்காணிப்பு பொறியாளரின் 13.09.2023 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

- மேற்காணும் கட்டுமானப் பணியினை மேற்கொள்ள, உரிய ஒப்பந்தப்புள்ளி மூலம் உரிய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்துவதற்கான ஆதாரங்களுடன் கூடிய ஒப்பந்ததாரர் திருமதி. மு. ஜோதி என்பவருக்கு இப்பணியினை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டது.

- கட்டுமானப் பணியினை பேரூராட்சியின் உதவி பொறியாளர் (தொகுப்பு), உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் மேற்பார்வையிட்டு, கட்டுமான பணிகள் அனைத்தும் அளவு புத்தகத்தில் (M Book) பதிவு செய்யப்பட்டுள்ளது.

- மேற்காணும் கட்டுமானப் பணியில் கான்கீரிட் கட்டுமானம் கட்டி முடிக்கப்பட்ட ஒரு சில நிமிடங்களில் கட்டுமானம் உலர்வதற்குள் எதிர்பாராமல் 14.05.2024 அன்று பெய்த கனமழை காரணமாக சுமார் 4 மீட்டர் தூரத்திற்கு கான்கீரிட் கட்டுமானம் சரிந்தது. இருப்பினும் ஒப்பந்ததாரர் அவரது செலவிலேயே கான்கீரிட் கட்டுமானப் பணியினை செய்து முடித்து தற்போது உறுதியுடன் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

- கட்டுமானப் பணியானது முடிவுற்றபின், விருதுநகர் மாவட்டம், கலசலிங்கம் ஆய்வு மற்றும் பொறியியல் கல்விக்கூடம் மூலம் மூன்றாம் தரப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவ்வறிக்கையின்படி இறுதி பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

➢ எனவே மழைநீர் வடிகால் கட்டுமானப் பணியானது முறையான அளவு கட்டுமானப் பொருட்களுடன் தரமாக கட்டி முடிக்கப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள நிலையில், மனுதாரர் எவ்வித ஆதாரமும் இல்லாமல், உண்மைக்கு புறம்பாகவும், உள்நோக்கத்துடனும் புகாராக தெரிவித்துள்ளார் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் திரு. S.K. கோபால் என்பவர் இன்று (24.07.2025) நேரடி விசாரணையின்போது தனது 31.05.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவிக்காத கீழ்க்காணும் புகார்கள் தெரிவித்துள்ளார்.

(1) சுடுகாட்டில் மோட்டார் பம்பு காணவில்லை, எரிமேடை சரியாக கட்டப்படவில்லை மற்றும் குளிக்கும் தொட்டி கட்டப்படும் என பேரூராட்சியால் தெரிவிக்கப்பட்டும் இந்நாள்வரை கட்டப்படவில்லை.

(2) பேரூராட்சியில் பேவர் பிளாக் சாலையானது ஆழமாக தோண்டி அமைக்கப்படாமல் அரைகுறையாக அமைக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் மனுதாரரின் கூடுதல் புகாரினை குறித்து உரிய ஆவணங்களை பரிசீலித்து அதன் அறிக்கையினை 15 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்க அனுமதி வேண்டி இம்முறைமன்றத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் 24.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போது அவரது 31.05.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவிக்காத புகார்களுக்கு மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 08.10.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 131/2025-ல் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''சென்னை மாண்பமை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மன்றத்தில் கடந்த 24.07.2025ஆம் தேதியன்று தங்களின் நேரடி விசாரணையின்போது திரு. S.K. கோபால் என்பவரால் தனது 31.05.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவிக்காமல் புதிதாக தெரிவிக்கப்பட்ட புகார்களுக்கு பின்வருமாறு அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சுடுகாட்டில் மின்மோட்டார் ஆனது மனுதாரர் புகார் தெரிவிக்கும் போது இயங்காமல் இருந்து தற்போது சரி செய்யப்பட்டு நன்முறையில் இயங்கி வருகிறது. எரிமேடையானது அரசு விதிகளின்படியும் பேரூராட்சி இளநிலை பொறியாளர் மற்றும் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படியும் சரியான முறையில் கட்டப்பட்டுள்ளது. மேலும் குளியல் தொட்டி பேரூராட்சியின் மூலம் கட்டப்பட்டு தொடர்ந்து பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.
2. மம்சாபுரம் பேரூராட்சியில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்போது அரசு விதிகளின்படி ஆழமாய் தோண்டியும், கல்தூசி தூவப்பட்டும் பேரூராட்சி இளநிலை பொறியாளர் மற்றும் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படியும் சட்டப்படியே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே மேற்காணும் அறிக்கையினை ஏற்றும், இது தொடர்பாக என்னால் இத்துடன் இணைத்து அனுப்பப்படும் புகைப்படங்களை பரிசீலித்தும் மேற்படி புகார்களை நிராகரிக்குமாறு பணிவுடன் வேண்டப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரர் திரு. S.K. கோபால் என்பவரின் புகார்மனு மற்றும் அவரது வாக்குமூலம், எதிர்மனுதாரரான மம்சாபுரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள் மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. S.K. கோபால் என்பவர் தனது 31.05.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட 17-வது வார்டில் (இராஜபாளையம் ரோடு) கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டி வரும் மழைநீர் வடிகால் தரமற்ற நிலையில் உள்ளதால் சிறிய மழைக்கே அந்த வடிகால் இடிந்து விழுந்துள்ளது எனவும் இதனால் பேரூராட்சிக்கு பல இலட்சம் ரூபாய் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என புகாராக தெரிவித்து, ஒப்பந்ததாரரிடமிருந்து வழங்கப்பட்ட தொகையினை திரும்பப் பெற்று, புதிய ஒப்பந்தப்புள்ளி மூலம் புதிய மழைநீர் வடிகால் கட்ட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மேலும் மனுதாரர் திரு. S.K. கோபால் இம்முறைமன்ற நடுவத்தில் 24.07.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையின்போது தனது 31.05.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவிக்காத கீழ்க்காணும் புகார்களையும் தெரிவித்துள்ளார்.

(1) சுடுகாட்டில் மோட்டார் பம்பு காணவில்லை, எரிமேடை சரியாக கட்டப்படவில்லை மற்றும் குளிக்கும் தொட்டி கட்டப்படும் என பேரூராட்சியால் தெரிவிக்கப்பட்டும் இந்நாள்வரை கட்டப்படவில்லை.

(2) பேரூராட்சியில் பேவர் பிளாக் சாலையானது ஆழமாக தோண்டி அமைக்கப்படாமல் அரைகுறையாக அமைக்கப்பட்டுள்ளது என்பன அறியப்பட்டது.

விருதுநகர் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியில் 2023-24ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணியினை மேற்கொள்ள 02.09.2023 நாளிட்ட சென்னை, பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறைகள் ஆணையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டும், அதனைத் தொடர்ந்து பேரூராட்சிகளின் இயக்குநரக கண்காணிப்பு பொறியாளரின் 13.09.2023 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டு உரிய ஒப்பந்தப்புள்ளி மூலம் பேரூராட்சியின் உதவி பொறியாளர் (தொகுப்பு) மற்றும் உதவி செயற்பொறியாளரின் மேற்பார்வையில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் அளவு புத்தகத்திலும் பதியப்பட்டுள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும், 14.05.2024 அன்று பெய்த கனமழை காரணமாக 4 மீட்டர் தூரத்திற்கு கட்டுமானம் சரிந்தது எனவும் அப்பணிகள் ஒப்பந்ததாரர் செலவிலேயே கான்கிரீட் கட்டுமான பணிகள் செய்து முடிக்கப்பட்டது என்பதையும் செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. முடிவு பெற்ற இக்கட்டுமானப் பணியை மூன்றாம் தரப்பும் ஆய்வு செய்யப்பட்டு, அதன்

அறிக்கையின் அடிப்படையில் ஒப்பந்ததாரரின் இறுதி பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது என பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதன் மூலம் அறிய வருகிறது.

பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் 14.05.2023 அன்று கனமழை பெய்ததாக தெரிவிக்கும் நிலையில், மனுதாரர் தரமற்ற கட்டுமான பணிகள் மேற்கொண்டதால் 14.05.2023 அன்று பெய்த சிறு மழைக்கே கட்டுமானம் இடிந்து விழுந்துள்ளதாக புகார் தெரிவித்து இருப்பதையும், இதற்கு ஆதாரமாக செய்தித் தாளில் வெளிவந்த செய்தித் துணுக்களின் நகலையும் சமர்ப்பித்துள்ளதன் மூலம் மனுதாரரின் புகாருக்கும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைக்கும் இடையே முரண்பாடுகள் உள்ளதை அறிய வருகிறது.

மேலும் மனுதாரர் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுவில் தெரிவிக்காத சுடுகாட்டில் மோட்டார் பம்ப் காணவில்லை என்ற புகாருக்கு, அச்சமயத்தில் மோட்டார் பம்ப் பழுது அடைந்து இயங்காமல் இருந்து தற்போது சரிசெய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது என பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதன் மூலம் மனுதாரரின் குற்றச்சாட்டுப்படி மோட்டார் பம்பு இல்லாதது நிரூபணமாகிறது. எரிமேடை மற்றும் குளியல் தொட்டி, மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைப்பது ஆகியவை அரசு விதிகளின்படி சரியான முறையில் கட்டப்பட்டுள்ளது என பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் தெரிவித்து குளியல் தொட்டி எரிமேடை ஆகியவற்றிற்கு ஆதாரமாக புகைப்படங்கள் சமர்ப்பித்துள்ளார். ஆனால் மம்சாபுரம் பேரூராட்சியில் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்ட புகாருக்கு எவ்வித ஆதாரமும் சமர்ப்பிக்கவில்லை.

மேற்காணும் நிலையில், மம்சாபுரம் பேரூராட்சி 17-வது வார்டில் மழைநீர் வடிகாலனது தரமாக கட்டப்பட்டுள்ளதா என்பதையும் மற்றும் மம்சாபுரம் பேரூராட்சியில் பேவர் பிளாக் சாலைகள் ஆழத்துடன் தரமாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்திடும் வகையில் பேரூராட்சிகளின் இயக்குநரக மூத்த பொறியாளர் தலைமையில் ஒரு குழு அமைத்து, அக்குழுவானது மேற்கண்ட கட்டுமான பணிகளை ஆய்வு செய்து, அக்குழு வழங்கும் அறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை இரண்டு மாதத்திற்குள் மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 07-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S.K. கோபால்,
கதவு எண்.17, காந்திஜி வாசக சாலைத்தெரு,
மம்சாபுரம், திருவில்லிபுத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம் - 625 531

2) செயல் அலுவலர்,
மம்சாபுரம் முதல்நிலை பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்